| Scale | | Tempo | | Style | |
|---|---|---|---|---|---|

44. உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும்

உன்னத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும்
வாசம் பண்ணுகிற தேவன்
நொருங்குண்ட பணிந்த ஆவியுள்ளவரிடம்
வாசம் பண்ணுகிறேன் என்றார் (ஏசாயா 57:15)

1

மலைகள் விலகினாலும் பார்வதங்கள்
நிலைபெயர்ந்தாலும்
எந்தன் கிருபையோ உன்னை விட்டென்றும்
விலகுவதுமில்லை (ஏசாயா 54:10)
இமைப்பொழுதுன்னை கைவிட்டாலும்
உன்னை சேர்த்துக் கொள்வேன் (ஏசாயா 54:7)
உன் மேல் மனதுருகும் கர்த்தரோ (ஏசாயா 54:10)
வாக்களித்து உள்ளார்

2

உனக்கு விரோதமாய் உருவாக்கும் ஆயுதம்
வாய்க்காதே போகும்
உனக்கு விரோதமாய் எழும்பும் நாவையும்
குற்றப்படுத்திடுவாய் (ஏசாயா 54:17)
உன்னை பெயர் சொல்லி அழைத்த தேவன்
இஸ்ரவேலின் கர்த்தர் (ஏசாயா 45:3)
உள்ளங்கையில் வரைந்துள்ளவர் (ஏசாயா 49:16)
என்றும் காத்திடுவார்

3

வறட்சிக்காலத்திலும் உன் ஆத்மாவை
திருப்தியாக்கிடுவார்
நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலவும்
நீரூற்றைப் போலவும்
கர்த்தர் உன்னை நித்தம் நடத்தி
செழிக்கச் செய்திடுவார் (ஏசாயா 58:11)
பூமியின் உயர் இடங்களிலும்
ஏறியிருக்கச் செய்வார் (ஏசாயா 58:14)